செய்தி வெளியீடு எண்: 011/2017 நாள்: 06.01.2017

**வேலூர் மாவட்டத்தில் விவசாய பயிர் சேதம் மற்றும் குடிநீர் தேவை குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் முன்னிலையில பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சபிதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேலூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட விவசாய பயிர் சேதம் மற்றும் குடிநீர் பற்றாக்குறை குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் முன்னிலையில பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சபிதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 20 வட்டாரங்களில் வேளாண்மை துறையின் கீழ் அந்தந்த வட்டாரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நெல், கேழ்வரகு, நிலக்கடலை, சிறுதாணிய பயிர்கள் மொத்த பரப்பளவு இலக்குகள் குறித்தும் மற்றும் தற்போது வரை பயிர் அறுவடைகள் செய்யப்பட்ட பரப்பளவு குறித்தும், எதிர்வரும் கோடைகாலத்தில் எஞ்சியுள்ள பரப்பளவின் உற்பத்தி இலக்குகளை அடைந்திட முடியுமா என்றும், மேலும் அந்தந்த வட்டாரங்களில் தற்போதுள்ள நிலத்தடி நீர்மட்டம், அணைகள் மற்றும் ஏரிகளில் உள்ள நீர்மட்ட அளவினை பற்றி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கேட்டதற்கு ஒவ்வொரு வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள் தங்கள் வட்டாரங்களில் விளைவிக்கப்பட்டுள்ள பயிர்கள் நிலவரங்களையும், நிலத்தடி நீர்மட்ட நிலைமைகளையும் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இதனை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் எதிர்வரும் கோடை காலத்திற்கு தேவையான அளவு குடிநீர் ஆழ்துளை கிணறுகள் மூலம் எவ்வளவு நாட்கள் வரை எந்தளவிற்கு பொதுமக்களுக்கு வழங்கமுடியும் என்பதையும் நீர்வளம் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் விரிவாக விளக்கிக் கூறினர்.

இவ்வாய்வு கூட்டத்திற்கு பின் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சபிதா, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி மாநிலம் முழுவதும் வறட்சி கணக்கெடுப்பு நடைபெறுகிறது. வேலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை அளவு எதிர்பார்த்ததை விட 200 மில்லிமீட்டர் குறைவாகவே கிடைக்கபெற்றுள்ளது. கிடைக்கப்பெற்ற மழைநீரினை கொண்டு விவசாயிகள் விவசாயம் செய்துள்ளனர். இருந்த போதிலும் மாவட்டத்தின் மேற்கு பகுதிகளில் விவசாய பயிர்கள் உற்பத்தி தண்ணீர் பற்றாக்குறையினால் குறைந்த அளவே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து உற்பத்தி செய்வதிலும் பிரச்சனைகள் இருக்க வாய்ப்புகள் உள்ளது.

மாவட்டத்திலுள்ள 20 வட்டாரங்களிலும் வறட்சி பாதிப்புகளை கணக்கெடுக்க தலா 1 குழு வீதம் 20 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 1 வேளாண்மை அலுவலர், 1 உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் 1 கிராம நிர்வாக அலுவலர் வீதம் மூவர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று நெல், நிலக்கடலை, கரும்பு, சிறுதாணியம் மற்றும் பருத்தி போன்ற 5 வகையான பயிர்களின் பாதிப்புகள் குறித்து கணக்கெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இக்கணக்கெடுப்பு வரும் 9 ஆம் தேதிக்குள் முடிவு பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு அறிக்கையாக சமர்பிப்பார்கள். இந்த அறிக்கைகளை கொண்டு மத்திய அரசிடம் வறட்சி பாதிப்புகள் குறித்து ஆலோசனைக்கூட்டம் நடத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இக்கூட்டத்திற்கு முன்னதாக மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.நீலோபர் கபில், பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சபிதா, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., ஆகியோர் ஜோலார்பேட்டை வட்டாரத்தில் உள்ள மண்டலவாடி, பொன்னேரி கிராமப்புறங்களிலும், திருப்பத்தூர் வட்டாரம் பால்னாங்குப்பம், சோமலாபுரம் கிராமப்புறங்களிலும், நாட்றாம்பள்ளி வட்டாரத்திலுள்ள மல்லகுண்டா கிராமத்திலும் பயிரிடப்பட்டுள்ள நெல், நிலக்கடலை, குதிரைவாலி, திசுவாழை, மரவள்ளிக்கிழங்கு விவசாய நிலங்களை நேரடியாக சென்று பார்வையிட்டு விவசாயிகளிடம் வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், கிணற்றுப்பாசனத்தின் மூலம் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியுமா என்றும், மேலும் அவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள குறைகளையும் பயிர் சேதங்களையும் கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பாலசுப்பிரமணி, திருமதி.ஜெயந்தி பத்மநாபன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.மணிவண்ணன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் திரு.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., கோட்டாட்சியர்கள் திரு.முருகேசன், திரு.அஜய் சீனிவாசன், வேளாண்தைத் துறை இணை இயக்குநர் திரு.அண்ணாதுரை, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.பொண்ணு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சுப்புலட்சுமி, மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வேளாண்மை உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

06/1/2017